# Spiritual Book Translation - From English to Tamil

| The Purpose: | நோக்கம்: |
|---|---|
| Your Soul's Emotional Journey<br>Learning how to experience life through a different lens<br><br>**Rick Lindal, PhD** | உங்கள் ஆத்மாவின் உணர்ச்சிவயப்பட்ட பயணம்<br>வாழ்க்கையை வேறு வித கண்ணாடி வில்லையால் நோக்கி அதை எப்படி அனுபவிப்பது என்பதை கற்றல்<br><br>ரிக் லின்டல், PhD |




| **FOREWORD**<br>**Erlendur Haraldsson, Ph.D.** | **முன்னுரை**<br>**எர்லென்டர் ஹரால்ட்ஸன் Ph.D.,** |
|---|---|
| Rick Lindal, Ph.D., was born in the city of Reykjavik, Iceland. He spent his boyhood years at his uncle's farm at Lakjamot in the north of Iceland and his teen years at Laugardalsholar, a farm in the south. As with all youth born in this | ரிக் லின்டல் Ph.D., ஐஸ்லேன்ட் நாட்டின் ரீக்ஜாவிக் என்ற நகரத்தில் பிறந்தார். அவர் தன் இளமைப் பருவத்தை ஐஸ்லேன்ட் நாட்டின் வட பகுதியில் லாக்ஜாமோட் (Lakjamot) என்ற இடத்தில் இருக்கிற தன் சித்தப்பா |

remote country, Dr. Lindal learned about the country's folklore and fairy tales, and the commonplace interest in ghosts and communication with the departed. During his teenage years, Rick developed a keen interest in parapsychology, which led to the reading of untold books on the subject and to the study of psychology at the universities of Toronto, Guelph, and Calgary in Canada, and later at the University of York in England where he completed his doctorate dissertation.

During his studies and over the course of thirty years, Dr. Lindal received training in numerous therapeutic techniques, including individual, family, and group psychotherapy. He has worked as a psychologist in prison, hospital, and community settings, and he is currently in private practice near the city of Toronto, Canada.

In recent years his psychotherapeutic technique has been focused on assisting his patients in the development and understanding of issues that pertain to their existence and purpose in life. This mode of therapy is focused on the exploration of existential and spiritual issues. During the course of treatment, regression techniques are often employed which attempt to allow patients to recall past lives, including the death experiences following those lives, as well as recollections of their activities following those incarnations once they have entered the Spiritual Dimension. Dr. Lindal tells me that explorations within the Spiritual Dimension prior to incarnations on Earth have proved helpful for some patients, as it is through them that they may often recall the reasons why they decided to venture into their

வின் பண்ணையிலும், தன் யுவப்பருவத்தை தென் பகுதியில் உள்ள லாகார்டல்ஷோலார் (Laugardalsholar) என்ற பண்ணையிலும் கழித்தார். தொலைவாக உள்ள இந்த நாட்டில் பிறந்த மற்ற குழந்தை களைப் போல் Dr. லின்டலும் அந்நாட்டின் கிராமப்புற பாட்டுக்களும், தேவதைக்கதைகளையும் கற்றறிந்தார். மேலும், ஆவி, இறந்தோருடன் உரையாடல், தொடர்பு போன்ற பொது விஷயங்களில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். தன் யுவப்பருவத்தில், ரிக் குறி சொல்லுதலைப் பற்றி ஆராயும் உளவியலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவருடைய ஆர்வம் பல அரிய நூல் களை வாசிக்கச் செய்ததுடன் அவரை டோரோன்டொ, குஎல்ப், கனடாவின் கால்கரி போன்ற பல்கலைக் கழகங்களில் பயின்று, பின்பு தன் டாக்டொரேட் பட்டத்துக்கான ஆய்வுக்கட்டுரையை இங்கிலாந்து நாட்டின் யார்க் பல்கலைக்கழகத்திலும் முடித்தார்.

கல்வி கற்கும் காலத்திலும், அந்த முப்பது ஆண்டு கால கட்டத்திலும் Dr.லின்டல் பல சிகிச்சை நுட்பங்களை கற்றறிந்தார். அதில் தனிப்பட்ட, குடும்ப, குழுக்களை சார்ந்த உளப்பிணி சிகிச்சையும் அடங்கும். அவர் சிறைச்சாலை, ஆஸ்பத்திரி, மற்றும், சமூக அமைப்புகளில் உளவியலாளராக பணியாற்றினார். தற்சமயம் கனடா வின் டோரோன்டோ நகருக்கு அருகில் சொந்தமாகவும், தனியார் மருத்துவராகவும் பணியாற்றி வருகிறார்.

சமீபத்திய ஆண்டுகளில் அவருடைய மன நோய் சிகிச்சை, நோயாளிகளின் உயிர் வாழ்தல், அவர்களின் வாழ்க்கையின் நோக்கம், வளர்ச்சி ஆகியவற்றை சார்ந்த விஷயங்களை அவர்கள் அறிந்து கொள்ள உதவுவதாக இருக்கிறது. இத்தகைய சிகிச்சை முறை உயிர் வாழ்தல் (இருத்தலியல்), ஆன்மீகம் ஆகியவைப் பற்றிய ஆய்வு மேற்கொள்ளுதலின் பக்கம் கவனம் செலுத்துவதாக உள்ளது. சிகிச்சை கால கட்டத்தில், பின்னோக்கும் சிகிச்சை நுட்பங்கள் கையாளப்படுகின்றன. அம்முறைகள் நோயாளி தன்னுடைய முந்திய ஜன்மத்தை நினைவில் கொண்டு, அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த மரண அனுபவத்தையும், ஆன்மீக பரிமாணத்தில்

current incarnation. These existential/spiritual explorations have the effect of widening the clients' sense of existence and helps them bestow a sense of purpose and meaning within their current lives.

In this book, The Purpose: Your Soul's Emotional Journey. Learning how to experience life through a different lens, Dr. Lindal attempts to present these complicated concepts in layman's terms, so readers unfamiliar with these concepts can readily understand them. Within the pages of this book, a worldview is presented, based mainly on the writings of Jane Roberts' Seth Material, Neale Donald Walsch's Conversations with God, Dr. Michael Newton's Journey of the Souls and Destiny of the Souls, and Victor Frankl's extensive writings on existential thought and psychotherapy.

The basic concepts presented in the book can be summarized as follows: (1) Every human consciousness exists simultaneously, both within the Spiritual Dimension and on Earth; the consciousness stationed within the Spiritual Dimension is referred to as the 'oversoul' and it guides a portion of itself, i.e. the 'soul', via intuition, that is projected onto Earth and envelops and maintains the existence of the human body during its lifetime. (2) Our consciousness never ceases to exist, and (3) we become fully aware of our greater being immediately following the death of our physical bodies. (4) A lifetime is simply a finite journey from our normal home within the Spiritual Dimension onto the planet Earth—stationed within a Physical Dimension of space/time. (5)

பிரவேசித்த பின் அடுத்து தரித்த அவதாரத்தின் நடவடிக்கைகளையும், நினைவு கொள்ள உதவுகின்றன. சில நோயாளிகள் பூமியில் அவதரிப்பதற்கு முன் இருந்த ஆன்மீக பரிமாணத்தின் ஆய்வு அவர்களுக்கு உதவியாக உள்ளது என Dr. லின்டல் என்னிடம் கூறுகின்றார். ஏனெனில் இதன் மூலமாகத்தான், அவர்கள் தற்போதைய அவதாரத்தில் உருவெடுத்த காரணத்தை நினைவுக்கு கொண்டு வர முடிகிறது. இந்த இருத்தலியல் / ஆன்மீக ஆய்வு வாடிக்கையாளரின் இருப்பு உணர்வை அகலப்படுத்தும் விளைவை உண்டாக்கி, தனது தற்கால வாழ்க்கையின் நோக்கத்தை உணரச்செய்கிறது.

"நோக்கம்" (The Purpose) என்ற இந்த புததகத்தில்: உங்கள் ஆத்மா வின் உணர்ச்சிகரமான பயணம். வாழ்க்கையை வேறு விதத்தில் அனுபவிக்கும் முறையை கற்றுக்கொள்ள, Dr. லின்டல் இந்த சிக்கலான கருத்து படிவத்தை, பழக்கப்படாத சதாரண பாமர மக்களும் சுலபமா புரிந்து கொள்ளும் வகையில் சமர்பித்துள்ளார். இப்புத்தகத்தின் பக்கங்களுக்குள் உலகளாவிய பார்வையில், ஜேன் ராபர்ட் உடைய சேத் மெடீரியல், (Jane Robert's Seth Material), நீல் டொனால்ட் எழுதிய வால்ஷ் கான்வர்சேஷன் வித் காட், (Neale Donald Walsch's Conversation with God), Dr. மைக்கேல் நியூடன் உடைய ஜர்னி ஆப் த ஸூல்ஸ் அண்ட் டெஸ்டினீ ஆப் த ஸூல்ஸ், (Dr. Michael Newton's Journey of the Souls and Destiny of the souls), ஆகியவர்களின் எழுத்து படைப்புகள், மற்றும் விக்டர் பிராங்கல்ஸ் (Victor Frankl's) விரிவாக எழுதிய இருத்தலியல் சிந்தனை மற்றும் உளப்பிணி சிகிச்சை முறைகளின் அடிப்படையில் தன் கருத்துக்களை சமர்பித்துள்ளார்.

இந்த புத்தகத்தில் சமர்பிக்கப்பட்ட அடிப்படை கருத்துக்களின் சுருக்கம் : (1) ஒவ்வொரு மனிதனின் பிரக்ஞையும் (conscioueness) ஒரே நேரத்தில் இரண்டிலும் - ஆன்மீக பரிமாணத்திலும், இப்பூமியிலும் இருக்கிறது. ஆன்மீக பரிமாணத்தில் குடியிருக்கும் பிரக்ஞையை உயர்-ஆத்மா எனவும், அது தன் உள்ளுணர்வால் தன்னுடைய ஒரு பகுதியை உலகில் உயிராக அல்லது ஆத்மாவாக வழி நடத்தி, அதை சூழ்ந்து வாழ் நாளில் பேணி பாதுகாத்து வருகிறது. (2) நமது பிரக்ஞை ஒருபோதும் மரணிப்பதில்லை,

| | |
|---|---|
| All events of major significance during our lifetimes are pre-destined and orchestrated by ourselves (i.e. our over-soul) prior to our physical existence. (6) The main purpose for our incarnations on Earth is to experience negative emotions 'firsthand', as the depths of these emotions cannot be experienced by our over-souls when they are focused exclusively within the Spiritual Dimension, and (7) it is through these experiences that our oversouls evolve spiritually. (8) Every individual is responsible for his actions, as he is the sole architect of all the experiences during his lifetime. (9) A divine challenge, or paradox, is self-imposed upon all incarnating souls; however, while the challenge during a lifetime is to experience the full thrust of negative emotions, a human being must not kill himself or others as a consequence of the intense sensations this experience may cause him to feel. | மற்றும் (3) நமது உடல் மரணித்த உடன் நாம் நமது உயர் இருப்பு நிலையை அறிந்து கொள்கிறோம். (4) நமது ஆயுள் காலம், இயல்பு இல்லமான ஆன்மீக பரிமாணத்திலிருந்து உலகிற்கு வரையறுக்கப்பட்ட பிரயாணம் ஆகும். அது சரீர நிலை பரிமாணத்திலும், இடம், நேரம் என்ற பரு நிலை பரிமாணத்திலும் நிலை கொண்டிருக்கும். (5) அனைத்து நிகழ்வுகளும் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டு நாம் சரீர ரீதியாக உரு எடுக்குமுன், நம்மால் செயல்படுத்தப்படுகின்றன (அதாவது, நமது உயர்-ஆத்மாவினால்). (6) இப்பூமியில் நமது அவதரிப்புகளின் முக்கிய நோக்கம் நாம் எதிர்மறை உணர்வுகளை முதலில் அனுபவிக்க வேண்டியதேயாகும். எனெனில், நமது உயர்-ஆத்மா இந்த எதிர்மறை உணர்வுகளை ஆழமாக அனுபவிக்க இயலாது. காரணம், உயர்-ஆத்மா தன் கவனத்தை ஆன்மீக பரிமாணத்தில் தான் செலுத்துகிறது, மற்றும் (7) இந்த அனுபவங்களினால் தான் நமது உயர்-ஆத்மா ஆன்மீகமாக மாற்றமடைந்து வளர்கிறது, (8) ஒவ்வொரு தனிப்பட்டவரும் தன் செயல்களுக்கு பொறுப்பாளி ஆவார், எனெனில் தமது வாழ்நாளின் அனைத்து அனுபவங்களுக்கும் அவர் தான் சிற்பி. (9) தெய்வீக சவால் அல்லது முரண்பாடு அவதரித்த ஆத்மாவினால் தன்மீது சுயமாக திணிக்கப்பட்ட ஒன்றாகும். எனினும், அந்த சவாலானது வாழ் நாளில் எதிர்மறை உணர்வுகளின் முழு வேகத்தையும் அனுபவிப்பதற்காக உள்ளதால், இந்த மனிதப்பிறவி தன் அனுபவங்களின் விளைவால் உண்டான தீவிர உணர்வுகளால் தன்னையோ, மற்றவரையோ கொல்லக்கூடாது. |
| There are numerous other existential and spiritual concepts espoused in this book that build on these basic ideas. Also, in the appendix and in the postings on the book's website, many of these issues are explored in more detail for the interested reader. | இப்புத்தகத்தில் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இருத்தலிய, ஆன்மீக கருத்துக்களின் அடிப்படையில் அற்பணிக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்தின் பிற்சேர்க்கையிலும், இணையதளத்திலும் இன்னும் பல விஷயங்கள் ஆராயப்பட்டு ஆர்வமுள்ள வாசகர்களுக்காக சமர்பிக்கப்பட்டுள்ளன. |
| In conversation with Dr. Lindal, he explains how once this overarching worldview is in place for his patients (i.e. for those who are able to accept these existential/spiritual concepts, or at least some of them), a context is provided, where the mundane psychological techniques, commonly used by psychologists when treating patients, have a better opportunity to take hold and change behavior. In his experience, a psychotherapy void of the exploration of purpose, meaning, and | Dr. லின்டல் உடன் பேசுகையில், ஒரு நேரத்தில் தன் நோயாளிகளுக்கு (அதாவது, இருத்தலியல் / ஆன்மீக கருத்துக்கள் ஏற்றுக்கொள்பவர் சில பேர்களுக்காவது) நீண்டு வளையும் ஏராளமான உலகக் கருத்துகளும், ஒர் பின்னணியும் கொடுக்கப்பட்டு, உளவியலாளர்கள் நோயாளிகளை |

spirituality seldom achieves positive long-term outcomes.

The overarching thesis in this text is that full emergence into negative emotions is the main objective of physical existence, while at the same time our challenge is not to cause harm to ourselves or to others when these emotions are overwhelming. From this perspective, a lifetime, as depicted in this book, is not an easy journey. Dr. Lindal explains that many readers find it is difficult to accept the idea that they themselves create their own experience, both the ups and the downs, in order to learn about the most painful emotions imaginable. And not only that, they are also in agreement, albeit on a spiritual level, with everything bad that does happen to them.

Dr. Lindal reports that these existential/spiritual concepts have proven to be therapeutic for those who have studied them prior to experiencing a particular tragic event. However, for those who are not familiar with these views at the time a tragedy befalls them, thrusting these ideas onto them at those times is tactless, insensitive, and not at all helpful, as they are not in a state of mind to be able, or willing, to contemplate the idea that they created the event that is now overwhelming them, for their own spiritual learning. However, once the negative emotions have been experienced fully (which is in fact the intention from a spiritual perspective) and the mood has begun to lift—be it a day, a week, a month, a year, a decade—it is human nature, in hindsight, to seek to understand the reasons why such a tragic event befell them and to bestow meaning onto the past—tragic as it may have been. The

குணப்படுத்தும் பொழுது, இவ்வுலகத்திய உளவிய நுட்பங்கள் பொதுவாக கையாளப்பட்டு, அவர்ளுக்கு மாற்றத்திற்கான சிறந்த வாய்ப்பும் இருந்தது, என விளக்குகிறார். அவருடைய அனுபவத்தில், நோக்கம் ஆய்வு, அர்த்தம், ஆன்மீகம், முதலியவையற்ற ஓர் உளப்பிணி சிகிச்சை, நீண்ட கால பயனை அளிக்காது.

இந்த உரையில் நீண்டு வளையும் ஆய்வறிக்கை என்னவென்றால் எதிர்மறை உணர்வுகளில் முழு தோற்றம் தான் பருநிலை இருத்தலின் முக்கிய நோக்கமாகும். அதே நேரத்தில், நமது சவால் அபரிமிதமான உணர்வுகளால் நமக்கோ அல்லது மற்றவருக்கோ தீங்கிழைக்கக்கூடாது. இந்த கண்ணோட்டத்தோடு, ஒரு வாழ்க்கை, இப்புத்தகத்தில் வர்ணிக்கப்பட்டது போல் சுலபமான பயணம் ஆகாது. Dr. லிண்டல், தமது சொந்த அனுபவங்களுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும், கற்பனைக்குட்பட்ட, வலி உண்டாக்கும் உணர்வுகளைப்பற்றியும் அறிந்துகொள்ள, தாம் தான் காரணம் என்று ஏற்றுக்கொள்வது பல வாசகர்களுக்கு சுலபமில்லை, என விளக்குகிறார். அது மட்டுமல்ல, இருப்பினும், ஆன்மீக அளவில், அவர்ளுக்கு உண்டாகும் கேடுகளுடன் அவர்களுக்கு உடன்பாடு உண்டு.

ஒருவர் தனக்கு யாதேனும் சோக நிகழ்வு நேரும் முன் இருத்தலியல் / ஆன்மீகம் பற்றி படித்து, அறிந்திருந்தால் மட்டும், இது அவருடைய சிகிச்சைக்கு உன்னதாக அமையும் என Dr. லிண்டல் கூறுகிறார். எனினும், அதைப்பற்றி அறியாதவர்களுக்கு ஏதேனும் சோக நிகழ்ச்சி நிகழும் பொழுது, அந்த நிகழ்ச்சிக்குக் காரணம் அவர் தான் என்ற கருத்தை திணிக்க முயன்றால், அது ஓர் திறமையற்ற, உணர்வற்ற, மற்றும், அவருக்கு பயன் தராத விஷயமாகும். ஏனெனில், அதைப்பற்றி சிந்தித்து அதை ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் அவர் இல்லை. ஆனால், எதிர் உணர்வுகளை முழுமையாக அனுபவித்து (உண்மையில், இது ஓர் ஆன்மீக எண்ணமும், ஏற்பாடும்) மன நிலை மாற ஆரம்பித்த பின், ஒரு நாள் ஆகட்டும், ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருடம், அல்லது 10 ஆண்டுகள் ஆகட்டும், அதன் பின் மனித இயல்பாக, இந்த சோக நிகழ்ச்சி தனக்கு ஏன் வந்ததென அறிந்து கொள்ளும் ஆர்வம் உண்டாகும். இப்புத்தகத்தின்

| | |
|---|---|
| worldview contained within the pages of this book can be presented to the patient at that juncture and to those who are able to accept the concepts of destiny, purpose, and meaning in human existence. | பக்கங்களில் குறிப்பிட்ட உலகக் கண்ணோட்டம் இந்த தருணத்தில் நோயாளிகளுக்கு கொடுக்கப்படுமேயானால், அவர்கள் விதி, நோக்கம், மற்றும் மனித இயல்பையும், இருத்தலையும் (உயிர் வாழ்வதையும்) ஏற்றுக்கொள்வர். |
| But what evidence is there for the existence of human consciousness following physical death? Contact with those who have passed away is not as uncommon as many may assume. In my research, The European Human Value Survey, which was administered to subjects in most countries of Western Europe around 1980, found that about every fourth person in Europe had at least felt once “that they were in contact with someone who has died.” There were large national differences, the greatest frequency being reported by Icelanders and Italians (41% and 34%, respectively) and the lowest by Norwegians and Danes (9% and 10%, respectively). In the United Kingdom, the percentage was 26%. The same question was asked in the USA, in three different surveys, in different years, using large representative sample sizes. The results from these surveys showed that 29%, 31%, and 41% were in agreement with the question. In all the countries surveyed, contact with someone who had died was reported more frequently among women than men. | மரணத்திற்குப்பின் மனித பிரக்ஞை (நனவு நிலை) குடிகொண்டிருப்பதற்கு என்ன ஆதாரம்? இறந்தோருடன் தொடர்புள்ள விஷயம் பலர் கருதிக்கொள்வது போல் அசாதாரணம் இல்லை. என்னுடைய ஆய்வில், 1980-ம் ஆண்டு வாக்கில், பல ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு நாலாவது நபரும், குறைந்த பட்சம் ஒரு தடவையாவது, இறந்து போன யாரோ ஒருத்தருடன் தொடர்பு கொண்டுள்ளார். அநேக தேசிய வேறுபாடுகளில், பெரிய நிகழ்வெண், ஐஸ்லாண்டவர் களாலும், இத்தாலியர் களாலும் (முறையே 41% மற்றும் 34%) அறிவிக்கப்பட்டது. மிகக் குறைந்த நிகழ்வெண் நார்வேஜியன்ஸ் மற்றும் டேன்ஸ் நாட்டினர் (முறையே 9% மற்றும் 10%) அறிவித்தனர். பிரிட்டிஷ் ஐக்கிய ராஜ்ஜியத்தின் சதவீதம் 26% தான். அதே கேள்வி அமெரிக்க நாட்டில் மூன்று மாறுபட்ட ஆய்வுக்களில் வெவ்வேறு வருடங்களிலும் அதிக அளவு மாதிரிகளுடன் கேட்கப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள் 29%, 31% மற்றும் 41% பேர் கேள்வியுடன் உடன்பாடு கொண்டவர்களாக இருந்தனர். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நாடு களிலும் இறந்தவர்களுடன் தொடர்பு இருந்ததாக ஆண்களை விட அதிக அளவில் பெண்களே அறிவித்தனர். |
| These surveys, however, did not tell us anything about the nature of the experience the person had with those who had passed away. For example, was the contact visual, auditory, olfactory, tactual, or simply a strong feeling of a presence? Under what circumstances did it occur—when and where? Who were the deceased—relatives, | இருப்பினும், இந்த ஆய்வுகள் இறந்தவருடன் தொடர்பு கொண்ட நபரின் அனுபவத் தன்மையை கூறுவதில்லை. உதாரணத்திற்கு, அந்த தொடர்பு கண் கூடாக காணக்கூடியதாக இருந்ததா, ஒலியை மட்டும் கேட்கக்கூடியதா, மோப்பத்தால் உணரக்கூடியதா, தொட்டுணரக்கூடியதா அல்லது வெறும் யாரோ இருப்பதான உணர்வா? எந்த சூழ்நிலையில் அப்படி தொடர்பு உண்டாயிற்று - எப்பொழுது, எங்கே? இறந்தவர் யார் - உறவினரா, நண்பரா அல்லது அன்னியரா? இந்த நபர்கள் எப்படி இறந்தனர். எத்தனைக்காலம் முன்பு? அடுத்து தொடர்ந்த ஆராய்ச்சியில், என் மாணவர்களின் உதவியுடன் ஐஸ்லேன்ட் (Iceland) நாட்டின் ஆரம்ப ஆய்வில் பதில் அளித்தவர்களில் |

friends, or strangers? How did those persons die, and how long ago? In a follow-up study, with the help of my students, 450 respondents from the Icelandic survey who had reported in the affirmative on the initial survey were interviewed in depth. The results of that study are reported in my book The Departed Among the Living (2012). Within the pages of the book, details of the respondents' experiences are discussed in over 400 brief case descriptions. Two observations among the numerous discoveries found in this study revealed that 50% of widows and widowers reported that they had had post-mortem contact with their deceased spouses. Also, of significant interest, was the discovery that in numerous instances contact with the departed occurred unexpectedly, without the experiencer having knowledge that the person had just passed away.

Visions of the departed, and of spiritual beings, are common just prior to death and have been referred to as 'deathbed visions'. Karlis Osis and I conducted the most extensive study that has been done on this subject to date, the results of which I subsequently published in the book At the Hour of Death, which has been translated into several languages and published in numerous editions, most recently in 2013 in a 30th edition. Past-life memories have also been one of my areas of research, which began at the encouragement of my friend and benefactor Prof. Ian Stevenson. Over the years I have investigated nearly one hundred cases of children claiming past-life memories, in four different countries. Some of these memories proved verifiable and convinced me to consider the idea of previous lives seriously, and I have written several articles and

ஆமாம் என அறிவித்த 450 பேர், மீண்டும் விரிவாக பேட்டி எடுக்கப்பட்டனர். அதன் முடிவுகள் எனது "The Departed among the Living (2012)" என்ற புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அப்புத்தக பக்கங்களில் பதிலளித்தோரின் அனுபவங்கள் 400-க்கும் மேற்பட்ட சுருக்கமான வழக்கு விவரங்களில் விவாதிக்கப்பட்டுள்ளன. பல கண்டுபிடிப்புகளின் மத்தியில் காணப்பட்ட இரண்டு கண்காணிப்புகள், 50 சதவீத விதவை மற்றும் மனைவியை இழந்தவர்கள், தாம் தன் மரணித்த துணைவி அல்லது துணைவருடன் பிரேத பரிசோதனைக்கு பிந்திய தொடர்பு கொண்டிருந்ததாக அறிவித்தனர். ஆர்வத்துடன் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு என்னவென்றால், பல நிகழ்வுகளில் இறந்தோருடன் எதிர்பாராமல் தொடர்பு ஏற்பட்டதாகும். அதுவும், தொடர்பு அனுபவித்தவர் இந்த தொடர்பு கொண்ட நபர் சிறிது நேரம் முன்பே காலமானார் என்பதை அறியாததாகும்.

இறந்தோரின் தரிசனங்களும், ஆன்மீக உயிர்களின் தரிசனங்களும் சாதாரணமாக மரணத்திற்கு முந்தி நிகழ்பவையே. அவைகள் "மரண படுக்கையின் தரிசனங்கள்" என குறிக்கப்படும். 'கார்லிஸ் ஓஸிஸ்' (Karlis Osis) என்பவரும் நானும் சேர்ந்து மேற்கொண்ட ஆராய்ச்சி, இன்றைய தேதி வரை இவ்விஷயத்தில் ஆராயப்பட்ட மிக விரிவான ஆய்வாகும். இதன் முடிவுகளை அடுத்து நான் "At the Hour of Death" என்ற புத்தகத்தில் பிரசுரித்துள்ளேன். இப்புத்தகம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பல பதிப்புகளாக பிரசுரிக்கப்பட்டு, மிக சமீபமான 2013-ம் ஆண்டில், 30-ம் வெளியீடாக வெளி வந்துள்ளது.

முந்திய வாழ்வின் நினைவுகள் கூட எனது ஆராய்ச்சியின் பகுதியாகும். இவை என் நண்பர் மற்றும் புரவலர் Prof. ஐயான் ஸ்டீவென்சன் (Prof. Ian Stevenson) அவர்களின் ஊக்கத்தினாலும், பல ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 வழக்குகளில், முந்திய வாழ்வின் நினைவுகளைப்பற்றி கூறிக்கொண்டிருக்கும் நான்கு வெவ்வேறு நாடுகளின் குழந்தைகளை விசாரித்திருக்கின்றேன். இதில் சில நினைவுகள் சரிபார்க்கக்கூடியதாக நிரூபித்து, முந்திய வாழ்க்கையின் கருத்துகளை தீவிர பரிசீலனைக்கு நம்பவைப்பதாக அமைந்தன. நான் இப்பொருள் மீது பல கட்டுரைகளும்,

book chapters on this subject.

Research investigating visitations by the dead, deathbed visions, and past-life memories suggests that a person’s consciousness, a soul, or some ethereal conscious presence of the human being, survives physical death. This topic has fascinated people throughout all of history and it continues to do so today. In this interesting book, Dr. Lindal takes this topic further and outside the realm of scientific enquiry when he proposes that the human journey during a lifetime is in fact a soul’s journey from a Spiritual Dimension into our physical realm. From this spiritual perspective, visitations by the dead, deathbed visions, and memories of past lives, are then within the normal course of events and not at all unusual. However, scientific proof for the existence of a Spiritual Dimension is likely to remain outside the scope of scientific enquiry for a very long time.

The perspective taken in this book takes a stab at bridging the divide between spirit and science, and provides the reader with a philosophy of existence, along with some practical psychotherapeutic suggestions, that may help him wrestle a purpose and meaning out of the inevitable ups and downs of life. Reading this book will broaden the horizons of the spiritually converted and of the scientific sceptic alike, as well as those individuals who fall on the continuum in between these two extremes.

*Erlendur Haraldsson, Ph.D.*
*Professor Emeritus of Psychology,*
*University of Iceland.*

புத்தகங்களில் அத்தியாயங்களும் எழுதியுள்ளேன்.

இறந்தவரின் விஜயத்தை விசாரிக்கும் ஆய்வு, மரணப்படுக்கை தரிசனம், மற்றும் முந்திய வாழ்க்கையின் நினைவுகள், ஒரு நபரின் மன நிலை, நினைவுகள், உயிர் அல்லது சில ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட மனிதனின் இருப்பு ஆகியவை உடல் மரணத்திலிருந்து அவர் தப்பிவிட்டதை கூறுகின்றன. இந்த தலைப்பு சரித்திரம் முழுவதும் மற்றும் இன்று வரை தொடர்ந்து மக்களை கவர்ந்துள்ளது. இந்த சுவாரஸ்யமான புத்தகத்தில், Dr.லின்டல், மனிதனின் வாழ் நாள் பிரயாணம் என்பது உண்மையில் ஆன்மீக பரிமாணத்திலிருந்து உயிர் உடல் ரீதியான சாம்ராஜ்யத்தில் பிரவேசிப்பது தான் என கூறி, இந்த தலைப்பை விஞ்ஞான விசாரணைக்கு வெளியே கொண்டுசெல்கிறார். இந்த ஆன்மீக கண்ணோட்டத்திலிருந்து இறந்தவரின் விஜயம், மரணப்படுக்கையின் தரிசனங்கள், முந்திய ஜன்மத்தின் நினைவுகள், முதலியன சாதாரணமாக நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளே தவிர, அசாதரணமானவை அல்ல. இருப்பினும், ஆன்மீக பரிமாணம் என ஒன்று இருப்பதற்கு ஆதாரம், வெகு நாட்களாக விஞ்ஞான விசாரணைக்கு வெளிப்பட்ட விஷயமாக உள்ளது.

ஆவிக்கும் விஞ்ஞானத்திற்கும் இடையே இருக்கும் பிளவை இணைக்கும் பாலமாக அமைய இப்புத்தகத்தின் கண்ணோட்டம், வாசகர்களுக்கு இருத்தலின் தத்துவத்தையும், தவிர்க்க முடியாத வாழ்க்கையின் ஏற்றம் இறக்கம், நோக்கம், அர்த்தம் ஆகியவைகளை எதிர்கொள்ள நடைமுறை உளவியல் சிகிச்சை ஆலோசனைகளை வழங்குகிறது. இப்புத்தகத்தின் வாசிப்பு, ஆன்மீகத்திற்கு மாற்றப்பட்டவர்களுக்கும், விஞ்ஞான நோக்குடன் கூடிய சந்தேக வாதிகளுக்கும், மற்றும் இவ்விரு கோடிகளுக்கு இடையில் மிதமான கருத்தை கொண்டவர்களுக்கும், தத்தம் எல்லைகளை விரிவு படுத்திக்கொள்ள உதவியாக இருக்கும்.

Erlendur Haraldsson Ph.D.
Prof. Emeritus of Psychology
University of Iceland

| | |
|---|---|
| Dr. Haraldsson is the author of numerous books, including: *The Departed Among the Living, At the Hour of Death (with Karlis Osis),* and *Modern Miracles: Sathya Sai Baba, The Story of A Modern Day Prophet.* For other publications, please go to www.hi.is/~erlendur | Dr. Haraldsson Ph.D. பல புத்தகங்களின் ஆசிரியர் ஆவார். அவர் எழுதிய பல புத்தகங்களில் The Departed Among the Living, The Hour of Death (with Karlis Osis), and Modern Miracles: Sathya Sai Baba, The Story of Modern Day Prophet என்ற புத்தகங்களும் அடங்கும்.<br>மற்ற பிரசுரங்களுக்கு, தயவு செய்து : http://www.hi.is/`erlendur |

Translated by : Naeem Syed

[http://Translation.Shaadmaani.Net](http://Translation.Shaadmaani.Net)